**Crl. Misc.39**

**Pg. /2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**

**CC 28/2023**

**Deposition of Witness LW 17 / PW10**

| | | | |
|---|---|---|---|
| Name | **திருமதி.ரூபி,காவல் ஆய்வாளர்** | Taluk | |
| Father Name | **சாமுவேல்** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 05 .02.2025** | | | |

**1, 3,4 எதிரிகள் ஆஜர். 5 வது எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கரூர் மாவட்டம் குற்றபதிவேடு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.07.2021 11.00 மணிக்கு மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த திருமதி.சித்ராதேவியிடம் ஜோதி முருகேஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 16/2021 , ச/பி.494 இதசவின் வழக்கு பதிவு செய்து முதல் கட்ட விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்ததை நான் 06.12.2022 ம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 1 வது எதிரி 2 வதாக திருமணம் செய்த நித்யாவை விசாரித்தேன். அவரது தந்தை நடேசன் என்பவரையும் விசாரித்தேன். ஆனால் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. 1 வது எதிரி 2 வதாக திருமணம் செய்த நித்யாவை பதிவு திருமணம் செய்ததது தொடர்பாக சார்பதிவாளர் சுந்தரவடிவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து திருமண பதிவு சான்றிதழின் சான்று நகலை பெற்றேன். **மேற்படி பதிவு சான்றிதழ் அ.சா.ஆ. 11 ஆக குறியிடப்படுகிறது.**

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு)
கரூர்.

2) இந்த வழக்கின் வாதி ஜோதிமுருகேஸ்வரி 21.07.2021ம்தேதி மாலை 16.30 மணிக்கு நிலையத்தில் கொடுத்த புகாருக்கு மனு எண். 418/2021 என்பதை வழங்கிய பெண் காவலர் தீபா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த மனு ரசீது அ.சா.ஆ. 12 ஆக குறியிடப்படுகிறது.** அப்போது வழக்கு பதிவு செய்து முதல் கட்ட விசாரணை மேற்கொண்ட சித்ராதேவி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகளின் மீது ச/பி. 323, 498A, 406, 506(i) மற்றும் 494 இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்கு கோப்பை விசாரணைக்கு நான் எந்த தேதி மற்றும் நேரத்தில் எடுத்து கொண்டேன் என்றால் 06.12.2022ம்தேதி எடுத்து கொண்டேன். நேரம் எனக்கு ஞாபகமில்லை. அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் வழக்கு பதிவு செய்வதற்கு முன்பே காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்பட்ட விவரத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படுகின்ற 1வது எதிரியின் வீட்டின் அருகில் உள்ள நபர்களை யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார். நான் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற 1வது எதிரியின் வீட்டின் அருகில் உள்ள நபர்களை விசாரித்தது கொடுத்து இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

2) 1ம் எதிரி அ.சா.7 வை எங்கு வைத்து திருமணம் செய்தார் என்றும், அந்த பகுதியில் உள்ள நபர்களை விசாரித்து அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா , என்பதை பொறுத்து இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சார்பதிவாளர் அலுவலரை விசாரித்தேன். 1ம் எதிரி அ.சா.7 வை எங்கு வைத்து திருமணம் செய்தார் என்பதை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். எனது இறுதி அறிக்கையில் எங்கு வைத்து திருமணம் செய்தார் என்பதை குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 1ம் எதிரிக்கும், அ.சா.8 க்கும்

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு)
கரூர்.

திருமணம் நடந்ததாக சொல்லப்பட்ட நிலையில் எங்கு வைத்து திருமணம் செய்தார் என்பதை எனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

3) 1ம் எதிரியும், அ.சா.1ம் எத்தனை ஆண்டுகளாக பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதை விசாரித்து தெரிந்து கொண்டு அதை எனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் தெரிந்து கொண்டேன். எந்த வருஷத்தில் இருந்து அவர்கள் பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை. அ.சா.1க்கு குடும்ப இல்வாழ்கை நடத்துவதற்கான உடல்ரீதியான பிரச்சனை இருப்பதை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அவ்வாறு எந்த பிரச்சனையும் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் , அ.சா.1க்கு உடல் ரீதியாக வலிப்பு நோய் இருப்பதால் அவர் எந்த வேலையும் செய்யமுடியாது என்றும், இல்வாழ்க்கையில் ஈடுபடமுடியாது என்றும், மருந்து உட்கொண்டு எந்நேரமும் தூங்குவார் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 தன்னை 1ம் எதிரி எந்த தேதியில் அடித்தார், எவ்வளவு பவுன் கேட்டார், கொலை மிரட்டல் விடுத்தார் என்பதை பற்றி இறுதி அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

4) அ.சா.1 , 1ம் எதிரியுடன் வாழ்ந்து வந்த கால கட்டத்தில் அ.சா.1ஐ அடித்ததாகவோ, வரதட்சணை கேட்டதாகவோ, துன்புறுத்தியதாகவோ 1ம் எதிரியின் மீதோ, மற்ற எதிரிகளின் மீதோ , அவர் வசிக்கின்ற வெங்கமேடு காவல் நிலையத்திலோ அல்லது எந்த காவல் நிலையத்திலாவது ஏதேனும் புகார் கொடுத்து அதன் மீது விசாரணை செய்யப்பட்டதா அல்லது வழக்கு எதுவும் பதிவு செய்யப்பட்டதா என்பதை பற்றி நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் தெரியவில்லை. அ.சா.1க்குதிருமணத்தின்போது அவரது பெற்றோர்கள் என்ன சீர்வரிசை செய்தார்கள் என்பதை தெரிந்து கொள்ள அவர்களது திருமண ஆல்பத்தை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு அ.சா.1 , 1ம் எதிரியின் மீது விவாகரத்து , ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

5) 1ம் எதிரியின் மீது அ.சா.1 எந்த நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல்

Sd/-R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு)
கரூர்.

செய்துள்ளார் என்றால் பொள்ளாச்சியில் ஜீவனாம்ச வழக்கு மற்றும் குடும்ப வன்முறை வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரிந்து கொண்டேன். 1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் நடக்கும் விவாகரத்து வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றும், அதை மறைத்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.2 முதல் 4 வரையான ஆவணங்கள் யார் யாரிடம் கொடுத்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி புகைப்படங்கள் செல்போன் மூலமாகவோ, மற்ற கருவிகளின் மூலமாகவோ எடுக்கப்பட்டதாகவோ எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி சான்றாவணங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைத்த போது 65 B சான்றிதழ் வழங்கப்படவில்லை என்றும், அந்த புகைப்படங்கள் morphing செய்யப்பட்ட புகைப்படங்கள் என்பதால்தான் மேற்படி சான்று வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

6) அ.சா.8 க்கும் , அவரது கணவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக வீட்டை விட்டு சென்றுவிட்டார் என்றும், அதனால் அவரது கணவர் தாந்தோணிமலை காவல்நிலையத்தில் அ.சா.8 ஐ காணவில்லை என்று புகார் அளித்தார் என்றும், அது சம்பந்தமாக நான் எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், அ.சா.7 க்கு ம் திருமணம் நடக்கவில்லை என்றும், அது சம்பந்தமான நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், அ.சா.8 க்கும் திருமணம் நடக்கவில்லை என்றும், அது சம்பந்தமான நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் அரசு தரப்பில் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 க்கு உடல்ரீதியான பிரச்சனை இருப்பதினால் அ.சா.1 ன் உறவினர்களும், 1ம் எதிரியின் உறவினர்களும் சுமுகமாக பேசி கடந்த 2017 ம் ஆண்டில் இருந்தே அ.சா.1 , 1ம் எதிரியை விட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்பதை பற்றி எனது குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

7) அ.சா.1 , 1ம் எதிரியின் மீது தாக்கல் செய்த வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு)
கரூர்.

ஆனதால் அவரை மிரட்டி அவரிடம் பணம் பறிக்க வேண்டுமென்பதற்காக அ.சா.1ல் சித்தரிக்கப்பட்ட புகைப்படங்களை என்னிடம் கொடுத்து அ.சா.1ற்கு இருந்து அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரியின் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. புகாரின் மீது சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், மற்ற எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கு எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அ.சா.ஆ.9 காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**3 முதல் 5 எதிரிகளின் தரப்பில் 1வது எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுகொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு)
கரூர்.